## சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

## வாரப்பாடசாலை

## செயலட்டை - 07

பாடம்:-பொருளியல்

தரம் -13

2021. 06. 21 – 2021. 06. 25

Province/ Weekly School Department of Education, Sabaragamuwa Province/ Weekly School Department of Education, Sabaragamuwa Province/ Weekly School Department of Education, Sabaragamuwa

**தேர்ச்சி 11.0 :- அபிவிருத்தியின் பன்முகத்தன்மையை விளக்கி நிலைபேறான அபிவிருத்திக்கு பங்களிப்பதற்கான விருப்பத்தினை விளக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 11.6:- இலங்கையில் வறுமை பற்றி விமர்சிப்பார்.**

- இலங்கையில் வறுமை முழு வறுமை , நுகர்வு வறுமையின் அடிப்படையில் அளவிடப்படுகிறது.

- இதனை கணிப்பிடுவதற்கு அவசியமான வருமானம் மற்றும் செலவுத்தரவுகள் குடித்தொகை புள்ளிவிபரத் திணைக்களத்தால் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை நடாத்தப்படுகின்றது.

- அண்மைக்காலத்தில் இவ்வாய்வு 2016ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டுள்ளது.

- சமூகப்பாதுகாப்பு :- தனிப்பட்டவர்களின் வருமானத்தை பாதுகாப்பதற்காக அரசினால் பொதுவாக பின்பற்றப்படும் கொள்கைகளே சமூகப்பாதுகாப்பு எனப்படும்.

- சமூகப்பாதுகாப்பு வலைப்பின்னல் :- ஏழ்மைக்கு தீர்வாக மிகப்பரந்த சமூகப் பாதுகாப்பு வலையமைப்பையே இது குறிக்கின்றது. இதில் சமூர்த்தி வேலைத்திட்டமும் வலது குறைந்தோருக்கு அளிக்கும் கொடுப்பனவுகளும் உள்ளடக்குகின்றது.

**பின்வரும் எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

1. இலங்கையின் வறுமையின் பிரதேச ரீதியான வேறுபாட்டிற்கான காரணிகள் யாவை?

2. இலங்கையின் வறுமையில் தாக்கம் செலுத்தும் காரணிகள் எவை?

3. இலங்கையில் வறுமையை குறைப்பதற்காக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் யாவை?

4. கிராமிய, தோட்ட உயர் வறுமைக்கான காரணங்கள் யாவை?

5. இலங்கை வறுமை ஒழிப்பில் அண்மைக் காலத்தில் பங்களிப்பு செய்த முக்கிய காரணிகள் யாவை?

6. சமூகப் பாதுகாப்பு என்பதால் கருதப்படுவது என்ன? இலங்கையின் சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடங்கியுள்ள மூன்று பிரதான கூறுகளை குறிப்பிடுக.